II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 196 of 2022**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 01.04.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Parimala | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | | : | |

<u>முதல் விசாரணை=</u>

என்னுடைய பெயர் பரிமளா. நான் வழக்கின் 1ம் வாதி. என்னுடைய பிரமாணப் பத்திரத்தினை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது முதல் விசாரணைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. பிரமாணப்பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழே கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

1. 25.03.1068 தேதியிட்ட அண்ணாச்சாரி வகையறா, என் தாயார் பெயருக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.1.
2. 16.12.2019 தேதியிட்ட என் தாயார் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரததின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.2.
3. 17.09.2020 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் நாங்கள் கொடுத்த புகாரை பதிவு செய்ததற்கான முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் வா.த.சா.ஆ.3.
4. 19.09.2020 தேதியிட்ட பிரதவாதி குறித்து தினத்தந்தி நாளிதழில்

பிரசூலிக்கப்பட்ட செய்தி குறிப்பு வா.த.சா.ஆ.4.

5. என் தாயாரின் இறப்பு சான்றிதழின் ஆன்லைன் நகல் வா.த.சா.ஆ.5.

6. என் தாயாரின் காலமான பிறகு நாங்கள் பெற்ற வாரிசு சான்றிதழின் ஆன்லை நகல் வா.த.சா.ஆ.6.

7. பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.125/2021 வழக்கின் பிராது நகல் வா.த.சா.ஆ. 7. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகின்றேன். வா.த.சா.ஆ. 3 ஆவணம் (Subject to proof and relavancy) என்று குறியீடு செய்யப்பட்டது)

(அறிவார்ந்த பிரதிவாதித் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)